[22nd September 1956

9-10 a.m. SRI P. M. MUNUSWAMY GOUNDER : ஆந்திரா எல்லைக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லாதிருக்கும்படியான ஹோசூர் தாலூகாவை எல்லைத் தகராறுள்ள பிரதேசமாகக் கருதி, எந்தப் பிரச்சனையிலும் சேர்க்காமல், சென்னை சர்க்கார் பாதுகாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பாதுகாப்பதற்கு இதில் ஒன்றும் கிடையாது. ஒருசமயம் கோலார் பிரதேசம் ஆந்திராவுக்குப் போகுமானால், அந்தச் சமயத்தில் ஹோசூரைப்பற்றியும் பரிசீலிக்கவேண்டிய ஒரு நிலைமை ஏற்படலாம் என்று அப்பொழுது எல்லோரும் உணர்ந்தார்கள். இப்பொழுது கோலார் பிரதேசம் ஆந்திராவுக்குப் போகாத காரணத்தால், ஆந்திராவானது ஹோசூரைப்பற்றி எந்தவிதமான பாத்யதையையும் கொண்டாடுவதற்கு இடம் இல்லை என்பதுதான் என் கருத்து.

SRI S. PANCHAKSHARAM : Is there any likelihood of this dispute being referred to the Zonal Council that will be formed after 1st November 1956 so that a Boundary Commission may not be appointed?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no such proposal, Sir. But, of course, the Zonal Council may consider any question. My own point of view is that this dispute should be settled, apart from the Zonal Council, by the immediate appointment of a Boundary Commission.

SRI A. RATNAM : நவம்பர் முதல் தேதிக்குள் எல்லைத் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து முடித்து வைப்பதற்கு அமைச்சரவர்கள் பொறுப்பு வாய்ந்த கமிட்டியொன்றை நியமிப்பதற்கு முன்வருவாரா? அல்லது, சித்தூர், திருத்தணி போன்ற பகுதிகள் ஆந்திராவில் சேரும் பட்சத்தில் சென்னையில் இருப்பவர்கள் போராட்டம் நடத்துவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொன்னது முழுவதும் எனக்கு விளங்கவில்லை. ஒரு கமிட்டி நியமித்துவிடுவதினால் இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர்ந்துவிடும் என்று சொன்னால், உடனடியாக ஏற்படுத்துவதற்குத் தயார். ஆனால் கமிட்டி ஏற்படுத்துவதன் மூலமாக இந்தப் பிரச்னை இன்னும் நீடிக்குமேயொழிய, சீக்கிரமாகத் தீரக்கூடிய நிலைமை ஏற்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட போராட்டம் எனக்கு நன்றாக விளங்கவில்லை.

Report from officials regarding survey of boundaries of Shencottah taluk

* 161 Q.—SRI K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to answers given to short notice question No. 63 on 6th April 1956 whether the State Government have received any report from the party of officials deputed to survey the boundaries of the area in the Shencottah taluk which is proposed to be transferred to the Madras State?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

Betting on the New York Cotton prices

* 162 Q.—SRI K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Finance be pleased to